ஐ.எ.221/2017 - அசல் வழக்கு எண்.30/2017 ம.சா.1. துரைராஜா த/பெ துரைசாமி
24.03.2023 குறுக்கு விசாரணை தொடர்ச்சி............

1. இந்த வழக்கில் 2ம் எதிர்மனுதாரர் அவர் சார்பில் மனுக்கள் தாக்கல் செய்வதற்கும்,எதிருரை தாக்கல் செய்வதற்கும் எனக்கு எப்போது அதிகாரம் வழங்கினார் என்றால் 2013ம் ஆண்டில் அவ்வாறு எனக்கு அதிகாரம் வழங்கினார். இந்த வழக்கு 2015ம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும். நான் தற்போது நடத்தி வரும் கடையின் பெயர் பாம்பே டெக்ஸ்டைல்ஸ் ஆகும். இதற்கு முன்பு கடையின் பெயர் அன்னை ஸ்டோர் என்று இருந்தது. அன்னை ஸ்டோர் என்ற பெயருக்கு பிறகு அந்த கடைக்கு வேறு ஏதாவது பெயர் மாற்றம் செய்யப்பட்டதாஎன்றால் இல்லை. பாம்பே டெக்ஸ்டைல்ஸ் என்று தான் மாற்றப்பட்டது.

2. அந்த கடையை என்னிடம் கொடுக்கும்போது அதன் பெயர் டி.ஆர்.ஸ்டோர் என்று இருந்ததா என்றால் டி.ஆர்.அன்னை ஸ்டோர் என்றுதான் இருந்தது. இந்த வருட ஆரம்பத்தில் என் கடையின் பெயரை பி.மார்க் என்று பெயர் மாற்றம் செய்தேன் என்றால் சரிதான். அவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்படும் ஒவ்வொருமுறையும் அதை மற்றவர்களை சேர்த்து ஒரு விழாவாக கொண்டாடுவேன் என்றால் சரிதான்.

3. 2015ம் ஆண்டில் இந்த கடையில் எந்தவிதமான மாற்றமும் செய்யக்கூடாது என கடைக்கு மேல் தளத்தில் எந்தவிதமான கட்டுமான பணியும் மேற்கொள்ளக்கூடாது என்று இந்த வழக்கின் ஒரு இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் கடைக்கு மேல் எத்தனை தளங்கள் கட்டப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எந்த தளமும் கட்டப்படவில்லை.

4. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பாம்பே ஸ்டோர்ஸ் என்ற கடையின் 2வது தளத்தில் கட்டுமான பணிகள் 2022ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது என்றால் அந்த புகைப்படம் உண்மை தான். ஆனால் அவ்வாறு கட்டுனமானப்பணிகள் 2000 ஆண்டுக்கு முன்பே மேற்கொள்ளப்பட்டதாகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் கடையின் முதல் தளத்தில் கட்டுமான பணிகள் செய்வதற்கு முன்பே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு இல்லை.

6. இந்த வழக்கின் 2ம் பிரதிவாதித்தரப்பில் மனுக்கள் தாக்கல் செய்வதற்கும், எதிருரை தாக்கல் செய்வதற்கும் எனக்கு எந்தவிதமான அதிகாரமும் வழங்கவில்லை என்றும் அவ்வாறு அதிகாரம் வழங்கி இருந்தால் அதற்குரிய ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 2013ம் ஆண்டிலேயே இந்த வழக்கிற்கான அதிகாரம் எனக்கு வழங்கப்பட்டது. அந்த ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். ( சாட்சி மீண்டும் சொல்கிறார் நீதிமன்றம் அனுமதித்தால் அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்று)

7. நான் சொல்வது போல் 2013ம் ஆண்டிலேயே 2015ம் ஆண்டில் தாக்கல் செய்யப்படவிருக்கும் வழக்கிற்காக அதிகாரம் எனக்கு வழங்கப்பட்டதாக சொல்கிறேன், அவ்வாறு 2015ல் வழக்கு தாக்கல் செய்யப்படும் நேரத்தில் தனியாக அந்த வழக்கு குறித்து மனுக்கள் தாக்கல் செய்வதற்கும் பதிலுரை தாக்கல் செய்வதற்கும் 2ம் பிரதிவாதியால் எனக்கு அதிகாரம் எதுவும் வழங்கப்பட்டதா என்றால் இல்லை.

8. 2015ம் ஆண்டிலேயே 2ம் பிரதிவாதியின் சார்பில் மனுக்கள் தாக்கல் செய்வதற்கோ பதிலுரை தாக்கல செய்வதற்கோ எனக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்று நான் சொல்லியுள்ளதால் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதித்தரப்பில் என்னால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் பதிலுரைகள் அனைத்தும் சட்டத்திற்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

9. 2015ம் ஆண்டில் என் கடையின் பெயர் ஓம் சரவணாஸ் என்றால் சரியல்ல. அது 1995ல் உள்ள பெயராகும். இந்த வழக்கு தாக்கல் செய்யப்படும் சமயத்தில் கடையின்பெயர் மாற்றம் செய்யப்படாமல் ஓம் சரவணாஸ் என்று இருந்தது என்றால் சரிதான். கடையில் ஓம் சரவணாஸ் என்ற பெயருக்கு கீழே துணிக்கடை அன்ட் ரெடிமேட்ஸ் என்று எழுதப்பட்டிருக்கும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் என் கடையின் புகைப்படம் என்றால் அது தவறான புகைப்படம் ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் 2000 ஆண்டுக்கு முன்பு கட்டப்பட்ட கடையாகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கடையின் மேல் தளத்தில் கட்டுமானப்பணிகள் துவங்கப்பட்டது என்றால் இல்லை.

10. 2015ம் அண்டில் இந்தவழக்கில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும் அன்றிலிருந்து இன்று வரை என் கடையில் பல மாற்றங்கள் செய்து மாடிகள் கட்டப்பட்டுள்ளது என்றும் அதனால் நீதிமன்ற உத்தரவை நான் மதிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்ற உத்தவை மதிக்காமல் இல்லை.

11. 2013ம்ஆண்டில் என் கடையை நான் 2ம் பிரதிவாதியிடமிருந்து விலைக்கு வாங்கினேன் என்றால் சரிதான். என்னை போல் பலரும் வாங்கி உள்ளார்கள். அவ்வாறு பலரும் வாங்கியுள்ளதாக சொன்ன வகையில் அவர்கள் 2ம் பிரதிவாதியிடமிருந்து தான் அவர்களுக்கான கடையை வாங்கினார்களா என்றால் இல்லை.

12. நான் இந்த வழக்கின் ஆரம்பத்திலிருந்தே நீதிமன்ற உத்தரவை மீறி பல முறைகேடுகள் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த மனுவில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதிலுரையை ஏற்றுக்கொண்டு இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

13. நான் என் கடைக்கு பல முறை பெயர் மாற்றம் செய்து மாடிகள் கட்டியும் அதை விழாவாக கொண்டாடியது குறித்து நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவ்வாறு நான் எந்த மாற்றமும் செய்யவில்லை. அவ்வாறு விழா கொண்டாடும்போது அதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அதனால் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு கடைக்கு பெயர் மாற்றம் செய்யும்போது நீதிமன்றத்திலிருந்து அதற்கான முன் அனுமதி மற்றும் உத்தரவு எதுவும் பெற்றுள்ளேனா என்றால் அவ்வாறு பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்று நீதிமன்ற உத்தரவு எதுவும் இல்லை. அதனால் அனுமதியோ அல்லது உத்தரவோ நான் பெறவில்லை.

14. நான் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்து இந்த மனுவில் எதிர்மனுதாரர் கோரியுள்ள பரிகாரத்தை வழங்க வேண்டுமென்றால் சரியல்ல. இந்த வழக்கில் என் சார்பில் 2ம் பிரதிவாதி சாட்சியம் அளிக்க வருவாரா என்றால் வருவார்.